DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 13/2017 PW 1 (LW1 ) |
| Preliminary Register | } | |
| Name | } | கார்த்திகா |
| Father's name | } | |
| Taluk | | |
| Village | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

**<u>Date: 27.10.2022</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் எம்சிஏ வரை படித்துள்ளேன். 1 ம் எதிரி என் கணவர். 2, 3 எதிரிகள் என் கணவரின் பெற்றோர். 23.11.2012 ம் தேதி திருப்பூரில் உள்ள ராமசாமிக்கவுண்டர் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது, திருமணத்திற்குப்பின்னிட்டு நானும் 1 ம் எதிரியும் கோவை பாரதி நகரில் குடியிருந்து வந்தோம். 16.12.2012 ம் தேதியில் அவர் அமெரிக்கா சென்றுவிட்டார். அதன்பிறகு நான் 2, 3 எதிரிகளுடன் அவர்கள் வீட்டில் இருந்து வந்தேன். எனக்கு திருமணத்தின் போது 100 பவுன் நகையும், ஸ்கோடா ஆபிட் காரும் எனக்கு சீதனமாகக்கொடுத்தார்கள். என் கணவர் மேலும் 100 பவுன் நகை கொண்டு வந்தால் தான் அமெரிக்கா செல்ல விசா ஏற்பாடு செய்வேன் என்றும், இல்லை என்றால் இங்கேயே இருந்து கொள் என்று சொல்லிவிட்டார். எதிரி தான் என்னிடம் வற்புறுத்தி காரை சீதனமாகக்கொடுக்கச்சொல்லி கேட்டுக்கொண்டார்கள். 100 பவுன் நகை மேலும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். என்னை என் மாமனார், மாமியார் எதற்கு எடுத்தாலும் திட்டி வந்தார்கள். என் கணவரும் அவரது பெற்றோர் பேச்சைக்கேட்டுக்கொண்டு என்னை அடிக்கடி திட்டிக்கொண்டிருந்தார். சிறிது சிறிதாக நகைகள் போடுவதாகவும், தற்போது இல்லை என்றும் எனது பெற்றோர் சொன்னார்கள்.

2) எனவே என் கணவர் விசா ஏற்பாடு செய்தார். 02.05.2013 ம் தேதியன்று அமெரிக்கா சென்றேன். என் மாமனார் மாமியார் போன் செய்தால் அவர்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டு என்னை அடிக்கடி திட்டியும் நகை கொண்டு வந்தால் நன்றாக வாழலாம் என்றும் கொத்தடிமையாக நடத்தி வந்தார். நான் கருவுற்றிருந்ததால் அமெரிக்காவில் அதிகமாக மருத்துவ செலவு ஏற்படும் என்பதாலும், என் பெற்றோரை மருத்துவ செலவு செய்ய வேண்டும் என சொல்லி வந்தார். ஜனவரி 2 ம் தேதி 2014 ம்

வருடம் நான் இந்தியா வந்துவிட்டேன். அப்போது நான் 3 மாதம் கர்ப்பமாக இருந்தேன். என்னை அதன் பிறகு கோயமுத்தூரில் அவர்களுடன் இருக்க விடாமல் திருப்பூரில் உள்ள என் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். என்னை ஒரு முறை திருப்பூருக்கு வந்து பார்த்தார்கள். திருப்பூர் வந்த போது எப்போது நகை கொடுப்பீர்கள் என்று கேட்டார்கள். 2014 ம் வருடம் ஏப்ரல் மாதம் எனக்கு வளைகாப்பு விழா செய்தார்கள். அப்போது என் கணவர் அமெரிக்காவில் இருந்தார். நான் நகைகள் கொடுக்காததால் வளைகாப்பு விழாவில் கலந்து கொள்ள வில்லை. வளைகாப்பு விழாவில் 10 பவுன் நகை என் பெற்றோர் போட்டார்கள். 19.06.2014 ம் தேதியன்று கேஎம்சிஎச் கோவை மருத்துவமனையில் எனக்கு ஆண் குழந்தை பிறந்தது.

3) மருத்துவமனைக்கு குழந்தையை பார்க்க என் கணவர் மற்றும் மாமனார் மாமியார் வந்தார்கள். அங்கு வைத்தும் நகைகள் போடவில்லையா என்றும், சேர்ந்து வாழ வேண்டாமா என்றும் கேட்டார்கள். கோயமுத்தூரில் மருத்துவமனையில் இருந்து என் கணவர் வீட்டிற்கு செல்லலாம் என கேட்டதற்கு அவர்கள் நகை கொண்டு வந்தால் தான் கூட்டிச்செல்வோம் என்று சொன்னதால் திருப்பூருக்குச்சென்றுவிட்டோம். என் கணவர் மீண்டும் அமெரிக்காவிற்கு சென்றுவிட்டார். செப்டம்பர் மாதம் 2014 ம் வருடம் என் கணவரின் குல தெய்வ கோவிலில் வைத்து குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா நடந்தது. அப்போது குழந்தைக்கு 3 பவுன் நகை என் பெற்றோர்கள் போட்டார்கள்.

4) ஏன் 10 பவுன் போடாமல் 3 பவுன் நகை போடுகிறீர்கள் என்றும், வளைகாப்பின் போதும், நாங்கள் 25 பவுன் நகை எதிர்பார்த்தோம் என்றும் சொன்னார்கள். நவம்பர் மாதம் என்னுடைய அண்ணனின் கல்யாணத்திற்கு எதிரிகளை அழைத்தோம். ஆனாலும் நகைகள் போடாததால் அவர்கள் திருமணத்திற்கு வரவில்லை. டிசம்பர் மாதத்தில் இருந்து என் கணவர் என்னுடைய செல்போன் எண்ணை பிளாக் செய்துவிட்டார். எனவே என்னுடைய போனை அட்டன் செய்யாமல் இருந்துவிட்டார். நாங்கள் நகைகள் போட்டு விடுகிறோம் என்றும், என் கணவரின் பெற்றோர் வீட்டில் இருக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டோம். ஆனால் அவர்கள் அனுமதிக்கவில்லை.

5) அதன் பிறகு 2015 ம் ஆண்டு ஏப்ரல் 2 ம் தேதி என் குழந்தையை எடுத்துக்கொண்டு என் கணவரின் பெற்றோர் வீட்டிற்கு சென்றோம். 22 ம் தேதி வரை அங்கு தான் இருந்தேன். ஆனால் அவர் என்னிடம் பேசவில்லை. அதன் பிறகு என் கணவர் என்னை அவர்கள் பெற்றோர் வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்றும், எனக்கும் என் குழந்தைக்கும் வேண்டியதை கொடுத்துவிடுவதாகச்சொல்லி எனக்கு மின் அஞ்சல் அனுப்பினார். எனக்கு அங்கு சமையல் செய்ய எந்தப்பொருளும் தரவில்லை. அதன்பிறகு எனது கணவரின் பெற்றோர் அவர்களுடைய மகள்

வீட்டிற்குச்செல்வதாகச்சொன்னார்கள். ஏப்ரல் 22 ம் தேதி திருப்பூருக்கு வந்துவிட்டேன். குழந்தைக்கு பழனியில் வைத்து மொட்டை அடித்துவிடலாம் என என் மாமனார் சொன்னார். அந்த விழாவிற்கு என் மாமனார் மட்டும் வந்தார். மாமியார் வரவில்லை. ஏன் மாமியார் வரவில்லை என்று கேட்டதற்கு நகை தராததால் வரவில்லை என சொல்லி நகையிலேயே குறியாக இருந்தார்கள். அதன்பிறகு ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை என் கணவரின் வீட்டில் தான் இருந்தேன். நகைகள் வேண்டும் என்றும் மிகவும் வற்புறுத்தி வந்தார்கள். மீண்டும் என் கணவரின் பெற்றோர் அவர்களது மகள் வீட்டிற்கு தீபாவளி பண்டிகைக்குச்செல்வதாகச்சொன்னதால் நான் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் பிறகு நவம்பர் 15 ம் தேதி என் கணவரின் பெற்றோர் வீட்டிற்கு வந்த போது வீடு பூட்டியிருந்தது. போனையும் சுவிட்ச் ஆப் செய்துவிட்டதால் வேறு வழியின்றி மீண்டும் திருப்பூருக்கு சென்றுவிட்டேன். மீண்டும் டிசம்பர் மாதம் என் கணவரின் பெற்றோர் வீட்டிற்கு வந்த போது அவர்கள் வீட்டிற்குள் இருந்து கொண்டே வெளியில் பூட்டு போட்டு பூட்டியிருந்தார்கள்.

6) அவர் போன் எடுக்காததால் என் கணவருக்கு மின்னஞ்சல் அனுப்பினேன். நான் அவரை கொடுமைப்படுத்தியதாக எனக்கு பதில் அனுப்பினார். ஜனவரி மாதம் என் குழந்தையின் புகைப்படத்தை அவருக்கு அடிக்கடி அனுப்பிக்கொண்டிருந்தேன். மார்ச் மாதம் என் கணவர் அமெரிக்காவில் இருந்து இந்தியா வந்து விட்டார். ஆனால் இந்த விவரத்தை எங்களுக்குச்சொல்லவில்லை. 27.3.2015 ம் தேதியன்று என் கணவர் வீட்டிற்கு சென்றேன். என் பெற்றோர் 10 பவுன் நகை கொடுத்தார்கள். 100 பவுன் நகை கொடுக்காததால் எங்களை வீட்டிற்குள்ளேயே விடவில்லை. அவர்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த குமார் என்ற நபரை வைத்து எங்களை மிரட்டி திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

7) வேறு வழியில்லாததால் 1.4.2015 ம் தேதியன்று திருப்பூரில் வைத்து ஒரு புகார் கொடுத்தேன். 5-ம் தேதி என் கணவரை காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி காவல் நிலையத்தில் சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்ற போது என் கணவர் வரவில்லை. அதன் பிறகு என் கணவர் மற்றும் அவர் பெற்றோர்களை 15 ம் தேதி வரச்சொல்லி காவல் நிலையத்திலிருந்து சம்மன் அனுப்பினார்கள். என் கணவர் அமெரிக்கா சென்றுவிட்டதாகவும் என் மாமியாருக்கு உடல் நிலை சரியில்லை என்றும் சொல்லிவிட்டார்கள். என் கணவரின் தகப்பனார் மட்டும் பின்னர் வருவதாகச்சொல்லி விட்டார். அதன் பிறகு வீட்டிற்கு வந்த போது என் கணவர் விவாகரத்து வழக்கு போட்டிருப்பதாக தபால் வந்தது.

8) அதன்பிறகு நான் கொடுத்த புகாரை கோவை புலியகுளம் காவல் நிலையத்திற்கு

மாற்றிவிட்டார்கள். எனக்கு நகைகள் போட்டது குறைவு என்றும் நகைகள் வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். நான் கொடுத்த புகாருக்கு விசாரணைக்கு எதிரிகள் வராததால் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார்கள். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நடந்த சமரச பேச்சுவார்த்தைக்கும் என் கணவரின் தகப்பனார் மட்டும் வந்தார். இது சம்மந்தமாக என்னைப்போலீசார் விசாரித்தார்கள். இதுவரை என்னையோ என் குழந்தையையோ என் கணவர் வந்து பார்க்கவில்லை. நான் மீண்டும் 05.07.2016 ம் தேதியன்று கோவை புலியகுளம் அனைத்து மகளிர் காவல நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | |
|---|---|
| Calendar | } CC .13/2017 PW 2 (LW 2 ) |
| Preliminary Register | } |
| Name | } சுந்தரம் |
| Father's name | } |
| Taluk | |
| Village | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

**Date: 27.10.2022**

**முதல் விசாரணை**

1) நான் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். அசா1 என் மகள். 1ம் எதிரி எனது மருமகன். 2, 3 எதிரிகள் எனக்கு சம்மந்தி ஆவார்கள். 23.11.2012ம் தேதி அசா1க்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணம் நடைபெற்று 10, 20 நாட்கள் மட்டும் கோயமுத்துாரில் இருந்தார்கள். அதன் பிறகு 1ம் எதிரி மட்டும் அமெரிக்கா சென்றுவிட்டார். அதன்பிறகு என் மகள் என் வீட்டில் இருந்தார். 5 மாதம் கழித்து மே மாதம் என் மகள் அமெரிக்கா சென்றாள். அதன் பிறகு 7 மாதம் அங்கிருந்து விட்டு கருவுற்றிருந்ததால் மீண்டும் இந்தியா வந்துவிட்டாள். 2014ம் வருடம் ஜூன் மாதம் குழந்தை பிறந்தது. அதன்பிறகு குழந்தையை மருத்துவமனையில் மட்டும் 1வது எதிரி பார்த்துவிட்டு சென்றார். அதன் பிறகு தற்போது வரை 8 வருடங்களாக அவர் வரவில்லை. அதன்பிறகு எவ்வித தொடர்பும் இல்லை. ஏற்கனவே 100 பவுன் நகை சீதனமாகக்கொடுத்தோம். மீண்டும் 100 பவுன் நகை போட வேண்டும் என்று கேட்டு வற்புறுத்தி வந்தாாகள்.

2) 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 நாளும், ஜுன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை என் மகள் அவளுடைய கணவரின் வீட்டில் இருந்தாள். அங்கிருந்த போது 2, 3 எதிரிகள் நகை கொண்டு வந்தால் தான் சேர்ந்து வாழ விடுவோம் என்று கொடுமைப்படுத்தி வந்தார்கள். அதன் பிறகு என் மகள் மீண்டும் திருப்பூர் வந்துவிட்டாள். அதன் பிறகு 10 பவுன் நகை கொண்டு சென்று எதிரிகள் வீட்டிற்கு போனோம். அப்போது வீடு பூட்டியிருந்தது. எனவே நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். அதன்பிறகு குழந்தைக்கு மொட்டை அடிக்கும் விழாவிற்கு 2ம் எதிரி மட்டும் வந்தார். அதன் பிறகு கோவை புலியகுளத்தில் என் மருமகன் வீட்டில் இல்லை என்றும் கண்டுபிடித்துக்கொடுக்குமாறு புகார் கொடுத்தோம்.

3) அதன் பிறகு 1 ம் எதிரி வந்தார். ஆனால் எவ்வித தொடர்பும் இல்லை. குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு போட்டுவிட்டார். தற்போது வழக்கு நடந்து வருகிறது.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, COIMBATORE.

| | | |
|---|---|---|
| Calendar | } | CC 13 /2017 PW 3 (LW 5 ) |
| Preliminary Register | } | |
| Name | } | கிருஷ்ணகுமார் |
| Father's name | } | |
| Taluk | | |
| Village | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the day or

**Date: 27.10.2022**

**முதல் விசாரணை**

1) நான் திருப்பூரில் குடியிருந்து பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அசா1 எனக்கு அக்கா முறை உறவினர் ஆவார். 2012 ம் ஆண்டு அசா1 க்கும் 1 ம் எதிரிக்கும் திருப்பூரில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்து கோவையில் உள்ள எதிரிகள் வீட்டிற்கு அக்கா வந்தார். நவம்பரில் திருமணம் நடைபெற்ற பிறகு டிசம்பர் மாதத்தில் 1 ம் எதிரி அமெரிக்கா சென்றுவிட்டார். அதன் பிறகு 2013 ம் வருடம் மே மாதம் அக்காவும் அமெரிக்கா சென்றுவிட்டார். அதன் பிறகு 2014 ம் ஆண் ஜனவரி மாதம் என் அக்கா கருவுற்றிருந்ததால் இந்தியா திரும்ப வந்துவிட்டார். 2014 ம் ஆண்டு ஜுன் மாதம் என் அக்காவிற்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை அவர்கள் வீட்டிற்கு கூட்டிச்செல்வதற்கு எதிரிகள் முன்வரவில்லை. குழந்தையை கூட்டிச்செல்லுமாறு நாங்கள் கேட்டதற்கு எந்தவித பதிலும் இல்லை. 2015 ம் ஆண்டு மே மாதம் குழந்தையை எடுத்துக்கொண்டு நாங்கள் எதிரிகள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அங்கு சென்ற போதும் எதிரிகள் நகைகள் கேட்பதையே குறியாக இருந்தார்கள். திருமணத்தின் போது 100 பவுன் நகை போட்டோம். 100 பவுன் பத்தாது என்றும் மேலும் 100 பவுன் நகை வேண்டும் என்றும் தினமும் டார்ச்சர் செய்தார்கள். எதிரிகள் 3 பேரும் நகைகள் கேட்டு கொடுமைப்படுத்தி வந்தார்கள்.

2) 8 மாதங்கள் என் அக்கா எதிரிகள் வீட்டில் இருந்த போதும் எதிரிகள் கண்டு கொள்ளாமல் நகைகள் கேட்டு வற்புறுத்தி வந்தார்கள். 2015 ம் தேதி நவம்பர் மாதம் எங்கள் வீட்டிற்கு என் அக்காவை கூட்டிச்சென்றோம். மீண்டும் 2016 ம் ஆண்டு ஜனவரி மாதம் கோவையில் உள்ள எதிரிகள் வீட்டிற்கு சென்றோம். நகைகள் இல்லாமல் வாழ விடமாட்டோம் என்று பிரச்சனை செய்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். நகைகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். எனது பெரியப்பாவான

அசா.2 10 பவுன் நகை கொடுத்தார். ஆனால் அவர்கள் போதாது என்று சொல்லி வாங்க மறுத்துவிட்டார்கள். தற்போது வரை சீதனமாக கொடுத்த நகைகளில் 50 பவுன் நகை மற்றும் கார் எதிரிகளிடம் தான் உள்ளது. இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என் அக்கா புகார் கொடுத்தார். நாங்கள் சென்றால் அவர்கள் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிடுவார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.